தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 269 – மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின், பொது திறைசேரியினதும், இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியல்லாத சொத்துக்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களின் இனங்காணப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 24 ஹெக்டயர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் (ACA-P) நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் ரூபா 559 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 03 பிரதேச செயலகங்களிற்குரிய ரூபா 23 மில்லியன் தொகை பெறுமதியான காணிகளின் உரிமையை தனதாக்குவதற்காக 05 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த 3 பிரதேச செயலகங்களுக்கான காணி உரிமை மாற்றம் தொடர்பாக தொடர்ச்சியான நடவடிக்கை கடந்த 3 வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	விரைவாக நடவடிக்கை எடுத்து 03 பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளை உரித்தாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2015 இற்கு முன்னர் மாவட்டத்தில் 10 பிரதேச செயலகங்களில் அரச செயற்திட்ட அமைப்புக்களினால் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக 678 அரச காணிகள் மற்றும் 94 தனியார் காணிகளில் நிர்மாணிக்கப்பட்டு முழுமையாக ஒப்படைக்கப்பட்டிருந்த 772 பொதுப் பயன்பாட்டுக் கட்டிடங்கள் மற்றும் அரச காணிகள் தொடர்பாக பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.	அரச கணக்குத் திணைக்களத்தின் SA/GFS/01/01/General இலக்கம் கொண்ட 2025.02.05 திகதிய கடிதத்தின் படி குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக்கொண்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்து அதனை முறைப் பிரகாரம் கணக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	காணிகளின் உரிமையை உரித்தாக்கி பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும், கட்டடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன எனவும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த 1.6.1(அ) பந்தியின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்பு இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 05 மற்றும் பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2016 ஜூன் 26 திகதிய 04/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை	அரச உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ வீடுகளை பயன்படுத்துவதற்காக அறவீடு செய்யப்படும் வாடகை அரச சேவையில் ஈடுபடும், தம்பதியினர் அரச வீடுகளில் வசிக்கும் போது அந்த உத்தியோகத்தரின் சம்பளத்திலிருந்து 10% தொகை மற்றும் அவரின் இணை அரச உத்தியோகத்தர் ஒருவர் எனின், இணையின் சம்பளத்தில் 2½ சதவீதமாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஜனவரி முதல் திசெம்பர் வரை உத்தியோகபூரவ் வாசஸ்தளத்தில் குடியிருந்த குறித்த உத்தியோகத்தரின் துணையின் சம்பளத்தில் இருந்து 2½ சதவீத வாடகை கணிக்கப்பட்டு அறவீடு செய்திருக்கவில்லை.	தாபனக் கோவையின் அத்தியாயம் XIX பிரிவு 05 இன் படி மற்றும் நிருவாகச் சுற்றறிக்கை 04/2016 இன் படி பிரிவுகள் 5.4 மற்றும் 5.4.1 இல் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் படி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் 12.5% அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், இணையிடம் 2.5% அறவீடு செய்தல் தொடர்பாக பொது நிருவாக அமைச்சிலிருந்து விளக்கம் கோறப்பட்டிருந்து.	தாபனக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் படி சரியான உத்தியோகபூர்வ வாசஸ்தள வாடகை அறவீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	**பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சின் பொது நிருவாகச் சுற்றறிக்கைகள்**			
(i)	2008 ஆகஸ்ட் 14 திகதிய 06/2008 இலக்கம் கொண்ட சுற்றிக்கையின் பிரிவு 04	2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 245 லீற்றர்களுக்கான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக உரிய அமைச்சுச்	மேலதிக எரிபொருள் செலவு பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும், இதுவரை அந்த	அங்கீகாரமின்றி பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறவீடு

		செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல், 2024 ஆண்டில் பிரயாணம் செய்த 18,720 கிலோ மீற்றர் தூரத்திற்காக மீளாய்வாண்டின் போது 3,552 லீற்றர் எரிபொருள் கொள்வனவு செய்வற்காக மாவட்ட செயலகத்தினால் ரூபா 1,219,711 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.	செய்முறை கடைப்பிடிக்கபடாமையால் , அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை என அறிவிப்பதுடன், எதிர் காலத்தில் மேற்கூறிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என கருணையுடன் அறிவிக்கின்றேன்.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2013 ஒக்தோபர் 07 திகதிய சுற்றறிக்கை இலக்கம் 21/2013 மற்றும் 2021 ஆகஸ்ட் 07 திகதிய சுற்றிக்கை இலக்கம் 15/2021	விடுமுறை தின கடமையானது எத்தினத்தில் மேற்கொள்ள வேண்டும், எவ்வேலை மேற்கொள்ள வேண்டும், அவ்வேலை நாளாந்த கடமைக்கு மேலதிகமான கடமைகளா எனவும் உண்மையில் எத்தனை நாளில் மேற்கொள்ள முடியும் என்பது பற்றிய திட்மிடல்கள் இன்றி விண்ணபங்கள் கோரப்படுவதும் சிபார்சு செய்யப்படுவதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறான விண்ணப்பம் கோரல், சிபார்சு செய்தல் தொடர்பில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	தற்போது விடுமுறை நாள் சம்பளத்திற்கான அங்கீகாரத்திற்கான விண்ணப்பப்பத்திரம் திருத்தப்பட்டு உரிய கவனத்துடன் அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றது.	விடுமுறை நாள் கடமைகளுக்காக விண்ணப்பித்தல், பரிந்துரைத்தல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று முறைப் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும்.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற மட்டக்களப்பு சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் சேவையாற்றிய கணக்காளர் ஒருவருக்கு 2023 ஏப்ரல் 27 திகதி முதல் 2023 ஒக்தோபர் 05 திகதி வரையான காலப் பகுதிக்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பிரதான கணக்காளர் என முழு நேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்காக ரூபா 476,530 இற்கான எரிபொருள் மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகபூர்வ வாகனத்திற்கு பதிலாக எரிபொருள் மற்றும் மாதாந்த கொடுப்பனவு செலுத்துவது தொடர்பாக பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2016 செப்தம்பர் 07 மற்றும் 2016 மார்ச் 09 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கைகள் இலக்கம் 05/2016 மற்றும் 05/2016(1) இன் படி அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி மற்றும் ஊழியர் குறிப்பிட்ட பதவியில் பதில் கடமைகள் (முழு நேர அடிப்படையில்) நிறைவேற்றப்பட்டதற்கான சான்றுகளை உறுதிப்படுத்துவதற்காக	குறிப்பிட்ட உத்தியோகத்தரின் வேண்டுகோளின் படி வழங்கப்பட்ட கொடுப்பனவிற்காக பொருத்தமாக்கும் அங்கீகாரம் வேண்டி அமைச்சுக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கைக்கு இணக்கமின்றி வழங்கியுள்ள கொடுப்பனவு தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அதிகாரமின்றிய இந்த கொடுப்பனவை மீண்டும் அறவீடு செய்வதற்கும், உரிய தரப்பினருக்கு முறையான நடவடிக்கைகள் எடுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	சமர்ப்பிக்கப்படும் செயலாற்றுகை மதிப்பீடொன்றின்றி மேற்கூறிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டடிருந்தது.		
(ஆ)	2024 ஆண்டின் போது மாவட்ட செயலாளரினால் மாவட்டத்திற்கு வெளியே போக்குவரத்து செய்தமைக்கு மேலதிகமாக எரிபொருள் 4,405 லீற்றர் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது மாவட்டத்திற்கு வெளியே பிரயாணம் செய்வதற்காக 3,146 லீற்றர் எரிபொருள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, மாவட்ட செயலகத்தினால் ரூபா 407,916 பெறுமதியுடைய 1,259 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக பெறப்பட்டிருந்தது.	மேலதிகமாக செலுத்தியிருந்த எரிபொருள் கொடுப்பனவு தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் வினவப்பட்டது. அதன்படி, மேலதிக எரிபொருள் எண்ணிக்கையை கணித்து குறிப்பிட்ட கொடுப்பனவுத் தொகை அறவீடு செய்யப்படும்.	மேலதிக எரிபொருள் எண்ணிக்கைக்குரிய பெறுமதியை கணித்து மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2023 மற்றும் 2024 ஆண்டுகளின் போது மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் நிறுவப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரத்திற்காக முறையே 509 லீற்றர் மற்றும் 408 லீற்றர் தொகை எரிபொருளுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவற்றின் பெறுமதி முறையே ரூபா 185,530 தொகை மற்றும் ரூபா 127,628 தொகையாக காணப்பட்டது. எவ்வாறாயினும், இந்த எரிபொருள் நுகர்வின் நம்பிக்கைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்விற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்கப்பட்டுள்ள எரிபொருள் பயன்பாடு மற்றும் கொடுப்பனவு தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிடம் வினவப்பட்டுள்ளது. அதன்படி, உரிய உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	எரிபொருள் பயன்பாடு மற்றும் அதற்குரிய செலவினை உறுதிப்படுத்துவதற்காக கணக்காய்வினால் வேண்டப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் தகவல்கள் வழங்கப்பட வேண்டியதுடன், முறையான விசாரணையொன்று மேற்கொண்டு தவறான பயன்பாடொன்று நேரிட்டிருந்தால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	தாபனக் கோவையின் அத்தியாயம் XXXII இன் படி கோரளைப்பற்று மத்திய மற்றும் கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலகங்களின் முகாமைத்துவ சேவையின் I ஆம் தரத்தையுடைய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டு முறையே 2019 செப்தம்பர் 28 திகதி முதல் 2023 மே 31 திகதி வரை மற்றும் 2018 ஜுலை 26 முதல் 2023 ஜுன் 02 வரையான காலப் பகுதிக்காக பதில் கடமைக் கொடுப்பனவு என பதில் கடமைப் பதவியில் ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீதம் கணிக்கப்பட்டு உத்தியோகத்தர் சேவையாற்றிய காலப் பகுதிக்காக முறையே ரூபா 455,079 தொகை மற்றும் ரூபா 581,493 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் கடமைக்கான கொடுப்பனவு தொடர்பாக தாபனக்	கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் பதில் கடமை நிருவாக உத்தியோகத்தர் என கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள சந்தர்ப்பமொன்றில் மேலதிகமாக பெறப்பட்டிருந்த கொடுப்பனவு மாதந்தம் மீண்டும் செலுத்தப்பட்டு வருகின்றது. கோரளைப்பற்று மத்திய பிரதேச செயலகத்தில் பதில் கடமை நிருவாக உத்தியோகத்தர் என சேவையாற்றிய உத்தியோகத்தர் தற்போது	தாபனக் கோவை மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்த கொடுப்பனவுகள் அந்த உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், அந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட தரப்பினர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கோவையின் அத்தியாயம் VII பிரிவு 12:5:2 படி மற்றும் பதில் கடமை செலுத்துவது தொடர்பாக மாவட்ட செயலக நிருவாகப் பிரிவினால் 2019 ஆகஸ்ட் 16 திகதி வெளியிடப்பட்டிருந்த ADM/INTCur/2018/2019 கடிதத்தின் படி ரூபா 58,212 தொகை மற்றும் ரூபா 76,904 தொகை மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது. அதன்படி, பதில் கடமைக்காக முறையே ரூபா 396,867 தொகை மற்றும் ரூபா 504,589 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் கடமையாற்றுவதனால் அதனை அறவீடு செய்து தரும்படி, உரிய திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்த்த நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரிகட் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வலையக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டிருந்த புதிய பாடசாலைகள் மற்றும் தற்போது கிரிகட் விளையாட்டில் ஈடுபடும் 25 பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் ரூபா 34.351 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த கிரிகட் விளையாட்டுப் பயிற்சி மைதானங்கள் மற்றும் கிரிகட் பயிற்சி புற்தரைகள் தொடர்பாக 15 பாடசாலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்கள் மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளரினால் பரிசோதனை செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஒப்பீட்டு ரீதியான நேர் கணித்தல் இணக்கம் மேற்கொண்ட போது 462.98 கனமீற்றர் எண்ணிக்கையான மண் குறைவாக போடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அதன்படி, மாவட்ட செயலகத்தினால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,973,590 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்த வேலையின் கால நீடிப்பின் படி இந்த விடயம் 2024 திசெம்பர் 20 திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2025 பெப்ரவரி 20 திகதி கணக்காய்வு திகதியளவிலும் முழுமையாகவும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் தாமதக் கட்டணமாக ஒப்பந்தக்காரரிடம் ரூபா 719,700 தொகை தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	Comprative Statement இல் உள்ள எண்ணிக்கையின் படி ஒப்பந்தகாரர்களால் கிறவல் பறிக்கப்படும் போது Hauling Measurements எடுக்கப்பட்டு பின் Pile செய்யப்பட்டு கிறவலானது பரவப்பட்டது. இவ்வேலைகளானது ஒப்பந்தகாரர்களால் முடிவுறுத்தப்பட்டு 2024.12.23 கணியச்சிட்டைகள் எமக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அவ்வேலையை பார்வையிடச் சென்ற போது வேலை நிறைவுறுத்தப்பட்டிருந்த போதிலும் சில குறைபராமரிப்பு வேலைகள் மாத்திரமே இருந்த காரணத்தினால் தண்டப்பணம் அறவிட வாய்ப்பிருக்கவில்லை.	முறையான விசாரணையொன்று மேற்கொண்டு 25 விலையாட்டுத் திடல்களுக்காக மண் நிரப்புதல் எண்ணிக்கையை கணித்து மேலதிக கொடுப்பனவுகளை அறவீடு செய்யப்பட வேண்டியதுடன், உரிய தரப்பினருக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	‘‘ஜயந்திபுரம் கிராம அபிவிருத்தி’’ சங்கத்தின் தலைவர் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் உத்தியோகதர் ஒருவராக கடமையாற்றுகிறார். அவர் 2024 ஆண்டு ‘‘ஜயந்திபுரம் கிராம அபிவிருத்தி சங்கம்’’ இற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலகங்களுக்காக ரூபா 9,583,832 தொகை பெறுமதியான 05 சிவில் வேலைகளுக்காக ஒப்பந்த வேலைகளுக்காக கையொப்பமிடப்பட்டிருந்தார்.	‘‘ஜயந்திபுரம் கிராம அபிவிருத்தி’’ சங்கத்தின் தலைவரான பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் என கடமையாற்றும் விடயம் தொடர்பாக கவனம் செலுத்துதல் தேவையானவாறு வெளியிடப்பட்டிருக்கவில்லை. தற்போது எங்களால் விசாரணைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பிட்ட விசாரணை அறிக்கையின் பரிந்துரையின் படி அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.	நடாத்தப்படுகின்ற விசாரணைகளை விரைவுபடுத்தி அதன் மீது குறிப்பிட்ட உத்தியோகத்தர் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2024 ஆண்டில் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்கு ரூபா 78.6 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. 2006 இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 1.2.1 வழிகாட்டலின் படி பெறுகையில் பங்குபற்றுவதற்கு தகைமையுடைய தரப்பினருக்கு நியாயமான மற்றும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டு போட்டி அடிப்படையின் மீது ஒப்பந்தக்காரர்கள் தெரிவு செய்யப்படாமல் பிரதேச செயலகம் ரூபா 46.9 மில்லியன் தொகை பெறுமதியான 18 வேலைகள் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டிருந்த மதிப்பீடுகளின் குறைபாடுகள் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட அலுவல்களுக்காக மேலதிக வேலை என ரூபா 1,564,652 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	குறைந்த கால வரையறையினுள் குறிப்பிட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டதனால் வேலைகளை விரைவாக பூர்த்தி செய்யும் குறிக்கோளுடன் சமூக அடிப்படை அமைப்புக் குழுக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.	பெறுகை வழிகாட்டலின் படி போட்டித் தன்மையின் மூலம் உச்ச மட்ட பொருளாதார அனுகூலங்கள் அரசுக்கு கிடைக்கக்கூடியவாறு ஒப்பந்த வேலைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 2024 ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 61.54 மில்லியன் தொகையில் ரூபா 30 மில்லியனிற்கான தொகையொன்று கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்தின் விளையாட்டுத் திடல் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை	இத் திட்டத்திற்கான வேலை மதிப்பீடுகள் அனைத்தும் கோறளைப்பற்று வடக்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருந்தும், காலத்திற்கு காலம் விலைகளில் ஏற்பட்ட	- மேற்படி -

வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் இலக்கம் 1.2.1 இனை கடைபிடிக்காமல் ரூபா 25 மில்லியனிற்கான தொகைக்கு பிரதேச செயலகத்தினால் 12 வேலைகள் சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தமையால், போட்டித் தன்மையினூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த விலை மாற்றங்கள் மற்றும் பொருளாதார அனுகூலங்களை அடைந்துகொள்ளும் சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டுள்ளது.	மாற்றத்தினால் மதிப்பீடுகள் மாற்றமடைந்துள்ளது என.	

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

4.3.1 நிதி அல்லாத சொத்துக்களை பயன்படுத்தல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான டிரக்டர் வண்டியொன்று, நீர் பவுசர் ஒன்று மற்றும் கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்கு சொந்தமான டிரக்டர் வண்டியொன்றுக்காக வருடாந்த வாகன வருமான அனுமதிப்பத்திரம் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையான காலம் முதல் பெற்றிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இப்பிரதேச செயலக இருப்புப்ப பதிவில் காணப்படும் உழவு இயந்திரம் மற்றும் வவுசர் மக்கள் பாவனைக்காக பிரதேச சபையிடம் வழங்கப்பட்டு காணப்படுவதனால் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் அவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய அனைத்து வாகனங்களுக்குமுரிய வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்திற்குரிய ரூபா 600,000 தொகை பெறுமதியான டிரக்டர் வண்டியொன்று மற்றும் ரூபா 50,000 பெறுமதியான டிரக்டர் டேலர் ஒன்று எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	இப்பிரதேச செயலக இருப்புப்ப பதிவில் காணப்படும் உழவு இயந்திரம் மற்றும் வவுசர் மக்கள் பாவனைக்காக பிரதேச சபையிடம் வழங்கப்பட்டு காணப்படுவதனால் அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவில் அவற்றை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	அனைத்துச் சொத்துக்களும் உரிய முறையில் முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பண்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டம் - 2024 இன் கீழ் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் இரண்டு தன்னார்வு அமைப்புக்களுக்கு ரூபா 5,942,156 தொகை பெறுமதியான பண்டங்கள் வழங்கப்பட்டிருந்தது. 2015 மற்றும் 2022 ஆண்டுகளின் போது பதிவு செய்யப்பட்டிருந்த இந்த தன்னார்வ அமைப்புக்கள் செயற்படுகின்ற அமைப்புக்களா என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்த 02 தன்னார்வ அமைப்புக்கள் மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், தற்போது இந்த இரண்டு அமைப்புக்களும் குறிப்பிட்ட முகவரிகளில் செயற்படாமல் மூடப்பட்டுள்ளதென எமது அவதானிப்புக்களில் உறுதிப்படுத்தப்பட்டது. தற்போது வழங்கப்பட்டுள்ள கமராக்களின் தேவைப்பாடுகள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அவற்றை மீண்டும்	முறையான விசாரணை மேற்கொண்டு செயற்படாத அமைப்புக்களுக்கு இவ்வாறு பண்டங்கள் வழங்கியிருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் கமராக்கள் மற்றும் உபகரணங்கள் குறிக்கோள்களின் படி

வழங்கப்பட்ட உபகரணங்களில் ரூபா 2,125,200 தொகை பெறுமதியான நவீன கமராக்கள் மற்றும் உபகரணங்களும் காணப்பட்டதுடன், மற்றும் இந்த நவீன கமராக்கள் மற்றும் உபகரணங்களின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.	பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள பண்டங்களின் தேவைப்பாட்டின் மீது வேண்டப்படுகின்ற அமைப்புக்களுக்கு வழங்குவதற்கு மாவட்ட செயலாளரின் அங்கீகாரம் மற்றும் அறிவுரை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	பயன்படுத்தப்படாவிடின், மீண்டும் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) தீர்க்கப்படாத வைப்புக்கள்

(i)	மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் ஆரயம்பதி பொது மயானத்திற்காக காணி தனதாக்கல் அலுவல்களுக்காக கிடைத்திருந்த ரூபா 9.6 மில்லியன் தொகை எதிர்ப்பார்த்த குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்காததுடன், காணியை தனதாக்கும் செய்முறையினை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்காமல் 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அந்தப் பணம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	குறிப்பிட்ட ஆரயம்பதி பொது மயானத்திற்காக காணி தனதாக்கலுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 9.6 மில்லியன் தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு செலவுகள் மேற்கொள்வதற்குரிய அங்கீகாரம் அரச கணக்குத் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட காணி தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் அதனை தனதாக்க முடியாமையால், குறிப்பிட்ட பணத்தை வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.	குறிப்பிட்ட அலுவல்களை விரைவுபடுத்தி நிதிப் பிரமாணங்களின் படி வைப்புப் பணத்தை தீர்த்துக்கொள்ள வேண்டும்.
(ii)	மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட வைப்புக்களின் கீழ் 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 26,355,774 இற்கான வைப்பு பெறுமதியொன்று காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 9,360,840 இற்கான பெறுமதியான வைப்புக்கள் 07 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நிதிப் பிரமாணம் 571 இன் படி மாவட்ட செயலகத்தினால் திருப்பிச் செலுத்துவதற்கு அல்லது அரச வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.	புதிய மாவட்ட செயலகக் கட்டிடத்தின் நிர்மாண வேலையின் ஆரம்ப ஒப்பந்தக்காரரான LINK நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தடுத்து வைத்தல் பணமாகும். குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு எதிராக Arbitration செயற்படுத்தப்படுகின்றமையால் குறிப்பிட்ட தடுத்து வைத்தல் பணத்தை மீண்டும் செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாமல் உள்ளது.	தடுத்து வைக்கப்பட்டுள்ள வைப்புக்களை உரிய கருமங்களுக்கு விரைவுபடுத்தி வைப்புகளுக்காக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 41 பிரிவில் காட்டப்பட்டுள்ள ஏற்படுகளுக்கு இணங்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்	கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட ஒப்பந்த வேலைகளுக்குரிய தாமதக் கட்டணம் ரூபா 57 மில்லியன் தொடர்பாக நிதிப்	குறிப்பிட்ட குறைபாடுகள் தொடர்பாக விரைவாக தீர்மானம் எடுத்து

நடாத்தப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலகங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறமதி மதிப்பீடு செய்தல், ஒப்பந்த வேலைகளுக்காக தாமதக் கட்டணம் அறவீடு செய்தல், கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முகாமைத்துவ திறமையின்மைகளை சரி செய்தல் மற்றும் 2019 ஆண்டின் அரச கணக்குக் குழுவின் குழுக்கூட்டங்களில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மற்றும் செயற்படுத்துதல் அனைத்துக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட போதிலும், ஐந்து வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த சிக்கல்கள் தீர்க்கபட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	பிரமாணம் 104 இன் படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. எனினும், குறிப்பிட்ட ஒப்பந்தக்காரருக்கு எதிராக Arbitration நடைபெறுகின்றமையால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ள முடியாதுள்ளது என அமைச்சுச் செயலாளரினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	செயற்படுத்தி சிக்கல்களை தீர்த்துக்கொள்ள வேண்டும்.

5.2 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட காலப் பகுதியினுள் பண்டங்கள், சேவைகள் மற்றும் ஒப்பந்த அலுவல்களை பூர்த்தி செய்யாமல் கட்டளையிடப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகளை பெற்றக்கொள்ளாமல் நிதிப் பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 பிரகாரம் அதிகாரங்களை செயற்படுத்தும் உத்தியோகத்தர்கள், வழங்குனர்களுக்கு மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்துவதற்குரிய காசோலைகள் எழுதப்பட்டு மூன்று மாதங்களுக்கு மிகையான காலம் முதல் கொடுப்பனவு செய்யாமல் இரும்புப் பெட்டியில் தடுத்து வைக்கப்பட்டிருநதது.	குறிப்பிட்டவாறு வேலைகளை பூர்த்தி செய்யாமல் எதுவித கொடுப்பனவும் ஒப்பந்தக்காரர்களுக்கு மேற்கொள்ளப்படமாட்டாது. பொதுமக்கள் நலனுக்கு முக்கியத்துவமளித்து நிதிப் பிரமாணங்களில் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குனருக்கு ஒப்பாக பயன்படுத்தப்படுவதில்லை. மேலும், உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் எடுத்து நிதிப் பிரமாணம் 136, 137, 138 மற்றும் 139 இன் கீழ் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களை முறைப் பிரகாரம் கடைபிடிக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) மாவட்ட செயலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆளணி 1687 தொகை காணப்பட்டதுடன், உள்ளவாறான ஆளணி 2376 தொகையாகும். அதன்படி, மிகைப் பதவியணி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 50 சதவீதம் எனப்படும் 841 ஆகும். 2024 திசெம்பர் 31 திகதி அளவில் பதவியணி தரத்தில்	எமது மாவட்ட செயலகத்திற்கு முகாமைத்துவ சேவைத் திணைக்களதகின் பணிப்பாளர் நாயகத்தினால் DMS/1205 இலக்கம் மற்றும் 2017.11.07 திகதிய கடிதத்தின் மூலம் ஆளணி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.	பதவியணி மீளாய்வொன்று மேற்கொண்டு அத்தியவசியான வெற்றிடங்களை மாத்திரம் நிரப்புவதற்கும் மிகைப் பதவியணியினரை சமப்படுத்துவதற்காக முறையான வேலைத் திட்டமொன்று மேற்கொள்வதற்கு

	பதவிகளுக்காக 32 வெற்றிடங்களும், இரண்டாம் மற்றும் ஆரம்ப உத்தியோகத்தர்கள் பதவிகளில் 120 வெற்றிடங்கள் காணப்பட்டது.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மட்டக்களப்பு மாவட்டதில் 14 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு பல்வேறு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்காக 667 பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் அந்த பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தில் சேவையாற்றும் மேலதிக பதவியினர் 833 ஆகும். இதன்படி மேலதிக பதவியணியினர் 125 சதவீதமாக காணப்பட்டது.	அமைச்சினால் நியமனங்களின் படி ஆளனி அங்கீகாரம் வழங்கப்படாததுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கைக்கு மிகையாக ஊழியர்கள் காணப்படுகின்றனர். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதேச செயலகங்களில் மிகையாக காணப்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் கடமைகள் நிறைவேற்றப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆளணியினை அதிகரிப்பதற்காக அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அதற்கான அங்கீகாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.	மிகை ஆளணியினை சமப்படுத்துவதற்காக முறையான விரைவான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்த வேண்டும்.